DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
RAMESWARAM
**CC.No.12/2019**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | Pw 2 | Caste | : | |
| Name | | ராக்கு | Age | : | |
| FN. | : | | Occupation | : | |
| Village | : | சேராங்கோட்டை, இராமேஸ்வரம் | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 19th day of October 2022.
19.10.2022.
முதல் விசாரணை:-

1. நான் இராமேஸ்வரம் சேராங்கோட்டையில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன்.அ.சா.1 ஐ எனது மகள். சுமார் 4 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் மாலை நேரத்தில் மீனவர் காலனியின் அருகே வந்துகொண்டிருந்தபோது ஹரி என்பவர் என் மகள் அ.சா1 ஐ கேலி, கிண்டல் செய்து சேலையை பிடித்து இழுத்து, அசிங்கப்படுத்தியதாக மீனவர் காலனியை சேர்ந்த உமையராஜ் என்பவர் தகவல் சொல்லி நான் சம்பவ இடம் சென்று எனது மகளை அழைத்துக்கொண்டு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் தினந்தோறும் கட்டுமானத் வேலைக்கு சென்றுவிட்டு மாலை 8 மணிக்கு தான் வீட்டிற்கு வருவேன்.புகார்தாரர் பிரியா எனது சொந்த மகள். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை உமையராஜ் சொல்லி தான் தெரியும். சேராங்கோட்டை, கரையுர், மருதுபாண்டியர் நகர், மீனவர் காலனி ஆகிய பகுதிகளில் குற்ற சம்பவம் நடைபெற்றால் துறைமுகம் காவல் நிலையத்தில் தான் புகார் கொடுப்போம் என்றால் சரிதான்.

2.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு சேராங்கோட்டை, கரையூர் வழியாக 5 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் அருகில் 100 வீட்டிற்கு மேலாக இருக்கிறது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் புகார் சம்பவம் நடந்த உடனே கொடுத்துவிட்டோம்.

3. எதிரியுடன் 4,5 நபர்கள் இருந்ததாக கேள்விபட்டேன்.எதிரிகளின் பெயர் கிராமத்தின் உடைய

தலைவர் சொல்லி தான் எனக்கு தெரியும். என்னை தனியாக விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான்.எதிரிக்கும் சம்பவத்திற்கு எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1 எனது மகள் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.